செ.வெ.எண்: 25 நாள்: 07.02.2017

# விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய அங்கன்வாடி கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது.

தமிழகஅரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி கட்டிடங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வீரப்பட்டி மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், இராஜகிரி ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் தலா ரூ.6.50 இலட்சம் என மொத்தம் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு அங்கன்வாடி கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அங்கன்வாடி கட்டிடங்கள் மூலம் இப்பகுதியை சேர்ந்த குழந்தைகள் போதிய இடவசதியுடன் சிரமமின்றி வந்து செல்ல முடியும். தமிழகஅரசு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் குழந்தைகளின் நலனை மேம்படுத்தும் வகையில் அங்கன்வாடியில் பல்வேறு சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்படி அங்கன்வாடியில் வாரம் முழுவதும் சத்தான கலவை சாதங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய கட்டிடங்கள் கட்டுதல், உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராமசாமி, ஆத்மாக்குழுத் தலைவர்கள் திரு.சாம்பசிவம், திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஷியம், திரு.சுப்பிரமணியன், திரு.செல்வராஜ், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.கிருஷ்ணன், திரு.பழனியாண்டி, கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**